(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Calender .. .. Case No. CC. 87 of 2019

Miscellaneous .. ..

Preliminary Register .. ..

Sessions .. ..

Deposition of witness for Prosecution **P.W.3**

Defence

Court

Name : தங்கவேல்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of August 2022.

10.08.2022

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்து இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். இவ்வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்தால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 எனது உறவினர். கடந்த 15.08.2017 ம் தேதி காலை 09.45 மணியளவில் நான் வயல் வேலை முடித்துவிட்டு அசா.1ன் வீட்டின் அருகே வரும்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து அ.சா1 யை ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் 1ம் எதிரி கீழே கிடந்த கட்டை கம்பை எடுத்து அசா.1 யை அடித்தார் என்றால் சரியல்ல.

ஆஜர் 3ம் எதிரி அசா.2 யை கட்டைகம்பால் தாக்கியதில் அவருக்கு பின்பக்க தலையிலும், இடுப்பிலும் ரத்தக் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் 2ம் எதிரி அசா.1ன் அப்பா சண்முகவேலை கட்டை கம்பால் தாக்கியத்தில் அவருக்கு முன்நெற்றியில் ரத்த காயமும், பிடரியில் வீக்க காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஆஜர் 2ம் எதிரி அசா.1ன் கையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அசா.1, அசா.2 மற்றும் சண்முகவேல் ஆகியோர் கூறியும் ரோட்டின் வடபுறம் உள்ள முள்வேலிக்குள் தள்ளிவிட்டபோது நானும் எனது மகளும் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் அசா.1, அசா.2 மற்றும் சண்முகவேல் ஆகியோரை பார்த்து கட்டையைக் காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல.

அப்போது ஆஜர் எதிரிகள் எங்களை தடுத்தால் உங்களுக்கும் இதே கதி தான் என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று

போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.